# நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கும் நேரத்தில் உங்களது உ

ரிமைகள்குழந்தைகள் மற்றும் இளம் வயதினருக்கான வழிகாட்டி

**நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கும் நேரத்தில் உங்கள் உரிமைகள் குறித்த முக்கியத் தகவல்களை இந்தத் துண்டுப்பிரசுரம் உங்களுக்கு வழங்குகிறது.** உரிமைகள் என்பது நம் அனைவருக்கும் உள்ள சட்டத்தால் பாதுகாக்கப்படும் சுதந்திரங்கள் மற்றும் ஆதரவுகள் ஆகும். 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு பெரியவர்களிடமிருந்து வேறுபட்ட சில உரிமைகள் உள்ளன, எனவே உங்களுக்கு என்ன உரிமைகள் உள்ளன என்பதை இந்தத் துண்டுப்பிரசுரம் விளக்குகிறது.

**உங்கள் உரிமைகளை அறிந்துகொள்வதும் புரிந்துகொள்வதும் நீங்கள் எப்போது நியாயமாக நடத்தப்படுகிறீர்கள் என்பதை அறிய உங்களுக்கு உதவும்.** நீங்கள் ஏதாவது தீங்கு விளைவித்திருக்கலாம் என்று கூறும் ஆதாரங்கள் அவர்களிடம் இருந்தாலும் கூட நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கும் போது உங்களைத் தீங்கு விளைவிக்காமல் பாதுகாப்பது மற்றும் உங்கள் நலனைக் கவனித்துக்கொள்வது ஆகியவை போலிஸின் கடமையாகும்.


**இந்தத் துண்டுப்பிரசுரத்தை இயன்றளவு விரைவாகப் படிக்கவும்.** நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கும் நேரத்தில் முடிவுகளை எடுக்க இது உதவும். இந்தத் துண்டுப் பிரசுரத்தை உங்களிடம் கொடுக்கும் நபர் இதைப் படிக்கவும் புரிந்துகொள்ளவும் உங்களுக்கு உதவுவார். இந்தத் துண்டுப் பிரசுரம் வேறு மொழியில் வேண்டுமா அல்லது நீங்கள் படிக்கவும் புரிந்துகொள்ளவும் எளிதான வேறு பதிப்பு வேண்டுமா என அவர்கள் உங்களிடம் கேட்பார்கள்.

CYCJ
Children and Young People's Centre for Justice
STARR
Safer Scotland
Scottish Government

1. **போலிஸ் உங்களை காவல் நிலையத்தில் ஏன் வைத்துள்ளார்கள் என்று தெரிந்துகொள்ளும் உரிமை உங்களுக்கு உண்டு.**

2. **போலிஸ் உங்களை காவல் நிலையத்திற்கு ஏன் அழைத்து வந்தார்கள் என்று தெரிந்துகொள்ளும் உரிமை உங்களுக்கு உண்டு.**






3. உங்கள் பெயர், முகவரி, பிறந்த தேதி மற்றும் தேசியம் உங்களுக்குத் தெரிந்திருந்தால் அவற்றை நீங்கள் போலிஸூக்கு வழங்க வேண்டும். இவை மட்டுமே நீங்கள் கட்டாயம் பதில் அளிக்க வேண்டிய கேள்விகள். **வேறு எந்தக் கேள்விகளுக்கும் பதில் அளிக்காமல் இருக்கும் உரிமை உங்களுக்கு இருக்கிறது.**

4. **நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கிறீர்கள் என்று யாரிடமாவது சொல்ல உங்களுக்கு உரிமை உண்டு.** நீங்கள் அங்கு இருப்பதை யாரிடமாவது சொல்ல விரும்புகிறீர்களா என்று போலிஸ் உங்களிடம் கேட்பார்கள். நீங்கள் சொல்ல விரும்பும் நபர் உங்கள் குடும்ப உறுப்பினர், உங்கள் பார்ட்னர், உங்கள் தொழிலில் ஒருவர், உங்கள் நண்பர் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவராக இருக்கலாம். நீங்கள் அந்த நபரிடம் பேசுவதற்கு அனுமதி கிடைக்காமலும்போகலாம். நீங்கள் 16 வயதுக்குட்பட்டவராக இருந்தால் அல்லது கட்டாயக் கண்காணிப்பு ஆணையின் கீழ் இருந்தால் காவல் நிலையத்தில் உங்களுடன் ஒருவரை வைத்துக்கொள்ளும் உரிமை உங்களுக்கு உண்டு. காவல் நிலையத்தில் உங்களை உங்கள் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் வந்து சந்திக்கும் உரிமை உங்களுக்கு இருக்கிறது.

5. **நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கிறீர்கள் என்பதை ஒரு வழக்கறிஞரிடம் சொல்லும் உரிமை உங்களுக்கு இருக்கிறது.** நீங்கள் காவல் நிலையத்தில் இருப்பதை ஒரு வழக்கறிஞரிடம் சொல்ல வேண்டுமா என போலிஸ் உங்களிடம் கேட்பார்கள். அது உங்கள் சொந்த வழக்கறிஞராக இருக்கலாம் அல்லது அழைப்பின் பேரில் வரும் வழக்கறிஞர் மற்றொரு வழக்கறிஞர் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்படுவார். இந்தச் சேவை இலவசமானது.



6. **எந்த நேரத்திலும் தனியாக ஒரு வழக்கறிஞரிடம் பேசும் உரிமை உங்களுக்கு உண்டு.** இந்தச் சேவை இலவசமானது.

7. **போலிஸ் உங்களை விசாரணை செய்யும்போது வழக்கறிஞர் உங்களுடன் அறையில் இருப்பதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது.** இந்தச் சேவை இலவசமானது.

8. **நீங்கள் 16 வயதிற்குட்பட்டவராக இருந்தால், போலிஸ் விசாரணை நடத்தும்போது உங்களுக்கு அதனால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்று கருதினால் தவிர, உங்களுடன் ஒரு வழக்கறிஞர் அவசியம் இருக்க வேண்டும்.** நீங்கள் 16 அல்லது 17 வயதுடையவர்கள் மற்றும் கண்காணிப்பு ஆணையின் கீழ் இருப்பவர் எனில் விதிவிலக்கான சூழ்நிலைகள் இருந்தால் தவிர, போலீஸ் உங்களை விசாரணை செய்யும்போது ஒரு வழக்கறிஞர் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

9. **உங்களுக்கு உடல்நலக்குறைவு இருந்தால் அல்லது காயம் ஏற்பட்டிருந்தால், மருத்துவ உதவி பெறும் உரிமை உங்களுக்கு இருக்கிறது. இதில் உங்கள் மனநலமும் அடங்கும்.** நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கும்போது உங்களைச் சரியாக கவனித்துக் கொள்வதை உறுதி செய்ய போலிஸ் உங்களிடம் உங்கள் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு பற்றிய கேள்விகளைக் கேட்பார்கள். நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கும்போது உங்களுக்கு உடல்நலக்குறைவு ஏதேனும் இருந்தால் அதை போலிஸிடம் குறிப்பிடுவது முக்கியமாகும். ஒரு மருத்துவர் அல்லது செவிலியரை உங்களை பரிசோதனை செய்ய போலிஸ் அழைக்கலாம். இது நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கும்போது உங்களைச் சரியாக கவனித்துக் கொள்வதை உறுதி செய்வதற்காகும். நீங்கள் ஒரு மருத்துவர், செவிலியர் அல்லது பிற சுகாதார நிபுணரைச் சந்தித்து ஆலோசனைப் பெற வேண்டுமா என்று போலிஸ் உங்களிடம் கேட்க வேண்டும்.

10. **உணவு மற்றும் பானம் பெறுவதற்கான உரிமை உங்களுக்கு உண்டு.** உங்களுக்கு தண்ணீர் வழங்கப்படும். உங்களை நான்கு மணிநேரத்திற்கு மேல் காவல் நிலையத்தில் வைத்திருந்தால் போலிஸ் உங்களுக்கு சாப்பிடும் நேரத்தில் உணவு வழங்குவார்கள். உங்களுக்கு ஏதேனும் குறிப்பிட்ட உணவுத் தேவைகள் உள்ளதா என போலிஸ் உங்களிடம் இயன்றளவு விரைவாக கேட்பார்கள்.

Children and Young People's Centre for Justice

STARR

Safer Scotland
Scottish Government

# கூடுதல் வழிகாட்டுதல்கள்...

**உங்களுக்கு கூடுதல் உதவி தேவைப்பட்டால்**
நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கும்போது என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவி தேவைப்படலாம். நீங்கள் 16 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர் எனில், பொருத்தமான வயது வந்தோர் என்றழைக்கப்படும் பயிற்சி பெற்ற ஆதரவு நபரிடமிருந்து இந்த உதவியைப் பெறலாம். உங்களுக்கு கற்றல் குறைபாடு அல்லது மனநலப் பிரச்சனைகள் இருந்தால் இது உங்களுக்குத் தேவைப்படலாம். நீங்கள் கேட்கவில்லை என்றாலும் கூட, பொருத்தமான வயதுவந்தோர் ஒருவர் தேவை என போலிஸ் நினைத்தால் அவர்களை அழைப்பார்கள்.

**உங்களுக்கு உதவ ஒரு மொழிபெயர்ப்பாளரை பெறுவது**
காவல் நிலையத்தில் என்ன சொல்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்வது முக்கியம். உங்களால் ஆங்கிலத்தில் பேச முடியாது அல்லது ஆங்கிலம் புரிந்துகொள்ள முடியாது எனில், உங்களது மொழியைப் பேசும் ஒருவரை போலிஸ் உதவிக்கு அழைப்பார்கள். அவர்கள் மொழிப்பெயர்ப்பாளர் என்று அழைக்கப்படுவார்கள். இந்தச் சேவை இலவசமானது.

**தகவல் தொடர்பிற்கு உதவி பெறுவது**
பெரும்பாலான நபர்களுக்கு காவல் நிலையத்தில் நடப்பதை புரிந்துகொள்வது கடினம். உங்களுக்குத் தேவையென்றாலோ அல்லது உங்களுக்கு ஏதாவது உறுதியாகத் தெரியாவிட்டாலோ உங்களுக்கு உதவி தேவையா என போலிஸ் உங்களிடம் கேட்க வேண்டும். உங்களுக்குப் படிக்க சிரமமாக இருந்தால் போலிஸ் படித்து காட்ட வேண்டும். நீங்கள் காது கேளாதவராக இருந்தால் அல்லது தெளிவாகத் தொடர்புகொள்வதில் உங்களுக்கு சிக்கல் இருந்தால், போலிஸ் உங்களுக்கு உதவ ஒருவரை அழைப்பார்கள். அந்த நபர் ஒரு BSL மொழிபெயர்ப்பாளராக இருக்கலாம் அல்லது மற்றொரு பொருத்தமான நிபுணராக இருக்கலாம். இந்தச் சேவை இலவசமானது.

**நீங்கள் பிரித்தானியர் இல்லையெனில்**
நீங்கள் ஒரு பிரித்தானிய நாட்டவர் இல்லையெனில், உங்கள் ஹை கமிஷன், தூதரகம் அல்லது துணைத் தூதரகத்தைத் தொடர்புகொண்டு, நீங்கள் காவல்நிலையத்தில் இருக்கிறீர்கள் என்பதையும் ஏன் இருக்கிறீர்கள் என்பதையும் அவர்களிடம் தெரிவிக்க போலீஸார் முன்வர வேண்டும். பிறகு யாரேனும் ஒருவர் உங்களைத் தனிமையில் சந்திக்கலாம் அல்லது உங்களைச் சந்திக்க ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்யலாம்.

**நீங்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீர்கள் அல்லது கைதாணையின் கீழ் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளீர்கள் என்றால் என்ன ஆகும்?**
நீங்கள் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தால், நீங்கள் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படலாம் அல்லது நீங்கள் காவல் நிலையத்தில் தங்கி அடுத்த வேலை நாளில் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டியிருக்கலாம். நீங்கள் வாரண்டில் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தால், நீங்கள் காவல் நிலையத்தில் தங்கி அடுத்த வேலை நாளில் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டியிருக்கலாம். சில சூழல்களில், நீங்கள் வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்படலாம்.

**உங்களை எவ்வளவு காலம் காவல் கண்காணிப்பில் வைத்திருக்கலாம்?**
போலிஸ் உங்கள் மீது எந்தக் குற்றமும் சுமத்தாமல் 12 மணி நேரம் வரை வைத்திருக்கலாம். போலிஸ் இதை அதிகபட்சமாக 24 மணிநேரம் வரை நீட்டிக்க முடியும், ஆனால் மூத்த காவல்துறை அதிகாரி இதை ஒப்புக்கொண்டால் மட்டுமே. இந்த முடிவைப் பற்றி உங்கள் கருத்தைக் கூற உங்களுக்கு உரிமை உள்ளது அல்லது உங்களுக்காக உங்கள் வழக்கறிஞர் போலிஸிடம் பேசுவதை நீங்கள் தேர்வு செய்யலாம்.

**ஆவணங்களைப் பார்ப்பது**
உங்கள் வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றால், வழக்கின் ஆதாரங்களின் குறிப்பு உங்களுக்கோ அல்லது உங்கள் வழக்கறிஞருக்கோ வழங்கப்படும். நீங்கள் அல்லது உங்கள் வழக்கறிஞர் உங்களுக்கான வழக்காடுதலுக்கு தயாராக இந்த குறிப்பு உதவும். உங்களுக்கு ஆங்கிலம் புரியாத பட்சத்தில் இந்தத் தகவல் அல்லது முக்கிய ஆவணங்களின் பொருத்தமான பகுதிகள் மொழிபெயர்க்கப்படும் உரிமை உங்களுக்கு உண்டு.

# கூடுதல் வழிகாட்டுதல்கள்...

**ஒரு வழக்கறிஞரைப் பெறுவதற்கான உங்கள் உரிமை பற்றிய தகவல்**

- ஒரு வழக்கறிஞரிடம் பேச வேண்டுமா என போலிஸ் உங்களிடம் கேட்பார்கள். போலிஸ் இயன்றவரை விரைவாக உங்களுக்காக ஒரு வழக்கறிஞரை தொடர்புகொள்வார்கள்.
- எந்த நேரத்திலும் உங்கள் வழக்கறிஞரிடம் தனிமையில் பேச உங்களுக்கு அனுமதி உண்டு. நீங்கள் உங்கள் வழக்கறிஞரிடம் தொலைபேசியில் பேசலாம் அல்லது வழக்கறிஞர் உங்களைப் பார்க்க காவல் நிலையம் வரலாம்.
- நீங்கள் வழக்கறிஞரிடம் பேசுவது வழக்கமான ஒன்றுதான் அது நீங்கள் ஏதோ தவறு செய்துவிட்டீர்கள் என்பது போல் வெளிப்படாது.
- வழக்கறிஞரின் வேலை உங்கள் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் உங்களுக்கு சட்டம் குறித்த ஆலோசனையை வழங்குவதாகும்.
- உங்களுக்குத் தெரிந்த வழக்கறிஞரிடம் நீங்கள் பேசலாம் அல்லது போலிஸ் உங்களுக்காக ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்வார்கள் - இந்த வழக்கறிஞரை அழைப்பின் பேரில் வரும் வழக்கறிஞர் எனக் குறிப்பிடுவார்கள். அழைப்பின் பேரில் வரும் வழக்கறிஞர் சார்பற்றவர் மற்றும் போலிஸுக்கு வேலை செய்பவர் அல்ல.
- போலிஸ் உங்களை விசாரணை செய்யும் போது, இது நடக்கும் போது அறையில் ஒரு வழக்கறிஞர் வேண்டுமா என போலிஸ் உங்களிடம் கேட்பார்கள்.
- ஒரு வழக்கறிஞரை உங்களுடன் அறையில் இருக்குமாறு நீங்கள் கேட்டிருந்தால், வழக்கறிஞர் இல்லாமல் உங்களை விசாரணை செய்ய போலிஸுக்கு பொதுவாக அனுமதி இல்லை.
- வழக்கறிஞரிடம் பேசுவது குறித்து உங்கள் முடிவை நீங்கள் மாற்றலாம் அல்லது எந்த நேரத்திலும் வழக்கறிஞர் வேண்டுமென நீங்கள் கேட்கலாம். இயன்றவரை விரைவாக இதை போலிஸிடம் சொல்லுங்கள் அவர்கள் உங்களுக்காக வழக்கறிஞரைத் தொடர்பு கொள்வார்கள்.
- வழக்கறிஞர் சொன்ன நேரத்திற்கு காவல் நிலையத்திற்கு வரவில்லை எனில் அல்லது நீங்கள் மீண்டும் வழக்கறிஞரிடம் பேச வேண்டுமெனில் அவரை மீண்டும் தொடர்புகொள்ளுமாறு நீங்கள் போலிஸிடம் கேட்கலாம். வழக்கறிஞரைத் தொடர்பு கொண்ட பிறகு அவர் எப்போது வருவார் என்பது போலிஸின் கட்டுப்பாட்டில் இல்லை. நீங்கள் போலிஸிடம் கோரிக்கை விடுத்தால் அவர்கள் உங்கள் எண்ணங்களையும் விருப்பங்களையும் வழக்கறிஞரிடம் பகிரலாம்.

**புகாரளிப்பதற்கான உங்கள் உரிமை**

- பலிஸ் உங்களை நடத்தும் விதம் குறித்து புகாரளிக்கும் உரிமை உங்களுக்கு இருக்கிறது.
- ஸ்காட்லாந்து போலிஸூக்கு எதிராக நீங்கள் புகார் செய்தால், அது தவறாக கருதப்படாது.
- நீங்கள் காவல் கண்காணிப்பில் இருக்கும்போது புகாரளிக்கலாம்.
- நீங்கள் காவல் கண்காணிப்பில் இருக்கும்போது புகாரளிக்க விரும்பினால், ஆய்வாளர் அல்லது உயரதிகாரி ஒருவரிடம் பேச வேண்டுமென்று தெரிவிக்கலாம்.
- நீங்கள் புகாரளிக்க விரும்பினால் உங்களை விடுவித்தப் பிறகு, நீங்கள் எந்த காவல் நிலையத்திற்கும் செல்லலாம்.
- உங்கள் கைதின் போது அல்லது போலிஸ் காவலில் இருக்கும் போது போலிஸ் அதிகாரி ஒருவரால் உங்களுக்கு அடிபட்டிருந்தால் அல்லது காயம் ஏற்பட்டிருந்தால் நீங்கள் போலிஸ் ஸ்காட்லேண்ட் புரொபஷனல் ஸ்டாண்டர்ட்ஸ் துறையில் புகாரளிக்க வேண்டும்.
- புகாரளிக்க 101 என்ற எண்ணைஅழைக்கவும் அல்லது உங்கள் உள்ளூர் காவல் நிலையத்திற்குச் செல்லவும்.
- உங்களுக்காக வேறொருவரை புகார் அளிக்குமாறும் நீங்கள் கேட்கலாம். அந்த நபர் பெற்றோர், நண்பர், பார்ட்னர் அல்லது நீங்கள் நம்பும் ஒருவராக இருக்கலாம். உங்கள் எழுத்துப்பூர்வ அனுமதியை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் நீதிக்கான மையம் (CYCJ) மற்றும் ஸ்காட்டிஷ் அரசாங்கத்துடன் இணைந்து, பாதுகாப்பான பராமரிப்பில் அனுபவமுள்ளவர்களுக்காக ஸ்காட்லாந்தின் நிர்வகிக்கப்பட்ட இடமான STARR உறுப்பினர்களால் இந்தத் துண்டுப் பிரசுரம் தயாரிக்கப்பட்டது. ‘புகாரளிப்பதற்கான உங்கள் உரிமை’ பீபிள் ஃபர்ஸ்ட் ஸ்காட்லாண்ட்-இலிருந்து தழுவப்பட்டது.

மேலதிகத் தகவல் மற்றும் ஆதரவுக்கு **justtherightspace.org** என்ற வலைத்தளத்தைப் பார்க்கவும்

© Crown copyright 2023

Children and Young People's Centre for Justice

STARR

Safer Scotland
Scottish Government